M

# இரண்டாம் திருப்புதல் பொதுத் தேர்வு - 2017

பன்னிரெண்டாம் வகுப்பு Reg.No.

நேரம்: 3.00 மணி

## வணிகவியல்

மதிப்பெண்கள்: 200

பகுதி - அ

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி:** 40 x 1 = 40

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:**

1. பதிவு கட்டாயமாக்கப்பட்டுள்ள அமைப்பு
   a) தனி வணிகம் b) கூட்டாண்மை
   c) கூட்டுப்பங்கு நிறுமம் d) இந்து கூட்டுக் குடும்பம்
2. ஒரு பன்னாட்டு நிறுமம் _______ என அழைக்கப்படுகிறது.
   a) உலக அளவில் பெரியது b) கூட்டாண்மை
   c) கூட்டுறவு சங்கங்கள் d) பொதுக் கூட்டுரு
3. தனியாள் வணிகத்தில் முடிவெடுப்பது
   a) விரைவாக b) தாமதமாக c) இரண்டும் இல்லை
4. தனியாள் வணிக அமைப்பிற்கு ஏற்றத் தொழில்கள்
   a) பேரளவு வியாபாரம் b) நடுத்தர வியாபாரம்
   c) சிற்றளவு வியாபாரம்
5. கூட்டாண்மையின் அடிப்படைக் கூறு
   a) பூரண நல்ல நம்பிக்கை b) முதலீட்டிற்கான தொகை இருத்தல்
   c) கூடி தொழில் செய்ய விருப்பம்
6. கூட்டாண்மை நிறுவனம் பதிவு செய்தல்
   a) 1949 சட்டம் b) 1956 சட்டம் c) 1932 சட்டம்
7. கூட்டாண்மை பதிவு
   a) கட்டாயம் b) விருப்பத்தின்பேரில் c) அவசியமில்லை
8. பொது வரையறு நிறுமத்தில் குறைந்த அளவு உறுப்பினர் எண்ணிக்கை
   a) 2 b) 5 c) 7 d) 10
9. நிறுமங்கள் சட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணை-A என்பது
   a) நிகழ்ச்சிக் குறிப்பேட்டின் மாதிரி b) இருப்புநிலைக் குறிப்பின் மாதிரி
   c) நிறும செயல்முறை விதிகளின் மாதிரி
   d) நிறும அமைப்பு முறையேட்டின் மாதிரி
10. ஒரு நிறுமத்தின் கடனீட்டுப் பத்திரதாரர்கள் என்பார், அதன்
    a) கடனாளர்கள் b) உறுப்பினர்கள் c) கடன் வாடிக்கையர்
11. _______ எண்ணிக்கைக்கு மிகாத பொது வரையறு நிறுமங்களில் ஒரே நேரத்தில் ஒரு நபர் இயக்குநர் பதவி வகிக்கலாம்.
    a) 10 b) 15 c) 20 d) வரம்பில்லை
12. ஒரு பொது வரையறு நிறுமத்தில் இயக்குநர் ஒருவர் வைத்திருக்க வேண்டிய தகுதிப் பங்குகளின் மதிப்பு
    a) ரூ.5,000 b) ரூ.50,000 c) ரூ.500 d) ரூ.5,00,000
13. இரு ஆண்டு பொதுக் கூட்டங்கட்கு உள்ள இடைவெளி
    a) 15 மாதங்கள் b) 12 மாதங்கள் c) 18 மாதங்கள் d) 20 மாதங்கள்
14. பங்கு மாற்றகம் இதில் ஈடுபட்டிருக்கிறது.
    a) சரக்கு b) சேவை
    c) நிதிப்பத்திரங்கள் d) நாட்டின் பணம்

15. எதிலும் கெட்டதையே காண்கின்ற மனப்பாங்கு கொண்டவர்
    a) கலைமான் b) கரடி
    c) காளை d) முட வாத்து
16. சபைத் தலைவருடன் சேர்ந்து செபியில் இவ்வளவு உறுப்பினர்கள் உள்ளனர்.
    a) 5 b) 7 c) 6 d) 8
17. கூட்டுறவில் குறைந்தபட்ச உறுப்பினர் எண்ணிக்கை _______.
    a) 2 b) 7 c) 10 d) 25
18. சிறுபான்மையர் நலத்தைப் பாதுகாக்கும் தொழில் அமைப்பு
    a) தனி வணிகம் b) கூட்டாண்மை
    c) கூட்டுறவுச் சங்கம் d) பொது நிறுமம்
19. பொதுமக்களும் இந்நிறுவனத்தின் பங்குகளை வாங்கலாம்.
    a) துறைவாரி அமைப்பு b) பொதுக் கழகம்
    c) அரசு நிறுமம் d) மேற்கூறிய நிறுவனங்கள் ஏதுமில்லை
20. அரசு நிறுமத்தில் அரசு கொண்டிருக்க வேண்டிய குறைந்தபட்ச பங்கு முதல்
    a) 51% b) 60% c) 75% d) 90%

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக:**

21. தனி வணிகரின் பொறுப்பு _______.
22. அரசு நிறுமத்தின் ஊழியர் _______ அல்லர்.
23. தனியாள் வணிகம் துவங்க _______ நபர் தேவை.
24. இந்தியாவில் கூட்டாளியின் பொறுப்பு _______.
25. நிறுவனத்தில் பங்கேற்காத கூட்டாளியை _______ எனலாம்.
26. கூட்டாண்மை நிறுவனத்தில் இலாப நட்டம் _______ பகிர்ந்தளிக்கப்படுகிறது.
27. பொறுப்புறுதியால் வரையறுக்கப்பட்ட நிறுமம் ஒன்றின் உறுப்பினரின் பொறுப்பு _______.
28. ஒரு நிறுமத்தின் அக மேலாண்மை குறித்த விவரங்கள் அடங்கியிருப்பது _______.
29. நிலுவையிலுள்ள பங்காதாயம் பெற உரிமையுள்ள முன்னுரிமைப் பங்குகள் _______ என அழைக்கப்படுகின்றன.
30. தனி வரையறு நிறுமத்தில் குறைந்தது _______ இயக்குநர்களாவது இருக்க வேண்டும்.
31. பங்குநர்கள் நிறுமத்தின் உண்மையான _______.
32. பொதுவாக தணிக்கையர் _______ கூட்டத்தில் நியமிக்கப்பட்டு ஊதியம் நிர்ணயிக்கப்படும்.
33. செயல்முறை விதிகளில் மாற்றம் செய்ய _______ தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும்.
34. _______ என்பது பங்குகளை வாங்க பொதுமக்களுக்கு விடுக்கும் ஓர் அழைப்பு.
35. தீர்வுப் பத்திரங்கள் _______ எனவும் அழைக்கப்படும்.
36. கலைமான் ஊக வாணிபர் _______ எனவும் அழைக்கப்படுவர்.
37. கூட்டுறவு இயக்கத்தின் தந்தை _______.
38. கூட்டுறவுச் சங்கத்தின் மேலாண்மை _______ கொண்டது.
39. அரசு தொழில் வடிவமைப்புகளில் மிகவும் பழமையானது _______.
40. பொதுக் கழகத்தை அரசால் நியமிக்கப்பட்ட _______ நிருவாகம் செய்கின்றது.



### பகுதி - ஆ

**III. எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளி:**

41. அமைப்பை வரையறு.
42. பன்னாட்டு நிறுமத்திற்கு எடுத்துக்காட்டுகள் தருக.
43. கூட்டுருவாக்கம் பெறாத அமைப்புகளின் வகைகளைக் கூறுக.
44. உழையா கூட்டாளி என்பவர் யார்?
45. கூட்டு மற்றும் தனி பொறுப்பு என்றால் என்ன?
46. வரையறு பொறுப்பு என்றால் என்ன?
47. பங்குகள் வட்டத்தில் வெளியிடுதல் என்றால் என்ன?
48. சட்ட முறை அறிக்கை என்றால் என்ன?
49. மாற்று இயக்குநர் என்பவர் யார்?
50. ஒப்புறுதியளித்தல் என்றால் என்ன?
51. பரஸ்பர நிதியின் வரைவிலக்கணம் கூறுக.
52. இராக்டேல் முன்னோடிகள் என்பவர் யார்?
53. கூட்டுறவு சிறப்பங்காடிகள் - வரைவிலக்கணம் தருக.
54. நாட்டுடைமையாக்கம் என்றால் என்ன?
55. பொதுக் கழகத்தின் மேலாண்மை பற்றிக் குறிப்பிடுக.

### பகுதி - இ

**IV. எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளி:**

56. இந்து கூட்டுக்குடும்பம் பற்றி சிறுகுறிப்பு வரைக.
57. கூட்டாண்மை ஒப்பாவணத்தில் உள்ள உள்ளடக்கம் யாது?
58. செயல் முறை விதிகளில் உள்ள பொருளடக்கங்கள் யாவை?
59. முறைகேடான ஒதுக்கீடு - குறிப்பு வரைக.
60. இயக்குநர் ஒருவரை நீக்கிடும் சூழ்நிலைகள் யாவை?
61. ஊக வாணிபர்களின் வகைகளை விவரி.
62. கூட்டுறவு சங்கத்தின் குறைபாடுகளை விவரி.
63. அரசு நிறுமத்தின் இயல்புகள் யாவை?

### பகுதி - ஈ

**V. அனைத்து வினாக்களுக்கும் விடையளி:**

64. a) அமைப்பின் கோட்பாடுகளை விவரி.
    (அல்லது)
    b) அரசுத் தொழில்களின் நோக்கங்களை விவரி.
65. a) தனி நபர் வணிகத்தின் குணாதிசயங்கள் யாவை?
    (அல்லது)
    b) கூட்டுறவு சங்கத்தின் நன்மைகள் யாவை?
66. a) கூட்டாளிகளின் உரிமைகள், கடமைகளை விவரி.
    (அல்லது)
    b) பங்குகட்கும், கடன் பத்திரங்களுக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை
67. a) நிறும செயலரின் பணிகளும், கடமைகளும் யாவை?
    (அல்லது)
    b) பங்கு மாற்றகத்தின் நன்மைகள் மற்றும் குறைபாடுகள் யாவை?

*****